முருகப்பெருமான் துணை

**மகான் வசிஷ்டமகரிஷி அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

18.01.2023, புதன்கிழமை

1. ஞானசக்தியே அரங்கா வாழ்க
ஞானபலம் கொண்ட தேசிகா வாழ்க
தானதரும வேலியிட்டு உலகினை
தவபலத்தால் காக்கவந்த குருராசனே
2. அரசனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது கலை திங்கள்
வரமென சதுர் திகதி கணக்கன் வாரம்
(சுபகிருது வருடம் தை மாதம் 04 ம் நாள் 18.01.2023, புதன்கிழமை)
வல்லமைபட அனுகூல ஆசிதனை
3. ஆசிதனை வசிஷ்டமகரிஷி யானும்
அருளுவேன் உலகோர் நலம்பெற
வாசிதனை வென்ற ஞானிகள்
வலம்வந்து பிரணவக் குடிலிலிருக்க
4. இருக்கவே அரங்கன் வாழ் குடிலை
இவ்வுலக மக்கள் அனுகிவரை
கருத்தாக அரங்கமகான் தரும்
கருணைமிக்க உபதேசங்கள்தனை
5. தன்னையே வேதமாக ஏற்று
தரணியோர் ஞானம் பயில
அண்ணல் அரங்கன் ஆசிபட
அனைவரும் ஞானவான்களாகத் தேறுவர்
6. தேறவே தொண்டர்படைகளெல்லாம்
தெய்வ சக்திகளாக மாறியே
அறத்தின் பலம் கொண்ட ஆளுமையாக
அரங்கமகான் தலைமை ஏற்ற ஆளுமையாக
7. ஆகவே உலகம் மாற்றம் கண்டு
அற்புதம் சடுதி கலியில் காணும்
வகைபட ஆளுமை சக்திகள்
வணங்கி அரங்கன் வழி வந்தால்
8. வந்திட நல்லத் தலைமைகளாக
வள்ளல்தன்மை நிரம்பிய வண்ணம்
சிந்தைபட ஆளுமைகள் சிறந்து
செப்பிட மக்களை காக்கும் வண்ணம்
9. வண்ணமுடன் ஆற்றல் மிக்க
வையகமே மாற்றம் காண்கும்
எண்ணமெல்லாம் முருகப்பெருமான் மேலான
இணையிலா வழிபாடு ஆகப் பெருகி

10. பெருகியே கலியுகம் தன்னில்
பேரிடர் துன்பம் ஏதுமில்லா
தருமபலம் மிக்க வளமிக்க
தரணியாக மாற்றம் கண்டு

11. கண்டுமே ஞானிகள் நிறைந்த
கருணை மிகுந்த ஞான சமூகமாகி
தொண்டுச் சிறந்த ஆளுமையாக
தேசமெல்லாம் ஞான ஆட்சிமலரும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–